Scale Dm Tempo 80 Style Ballad> 16 Beat

23. எக்காள தொனி

எக்காள தொனியோடே வீணையோடும்
சுரமண்டலத்தோடுமே
தம்புரோடும் நடனத்தோடும்
யாழோடும் தீங்குழலோடும்
ஓசையுள்ள கைத்தாளத்தோடு
இயேசுவை துதியுங்கள்
பேரோசையுள்ள கைத்தாளத்தோடு
அவரையே துதியுங்கள் (சங் 150:3-5)

1
ஜீவனைப் பார்க்கிலும்
உமது கிருபை என்றும் நல்லது
ஜீவனுள்ள மட்டும் நாளும்
உமது நாமத்தைச் சொல்லுவேன் (சங் 63:3,4) - என்

2
தேவரீர் சகலத்தையும் நீர்
செய்ய வல்லவரானீர்
நீர் செய்ய நினைத்தது ஒன்றுமே
தடைபடாதென்று அறிந்திடுவேன் (யோபு 42:2)

3

கர்த்தர் என் பெலனும் கீதமும்
இரட்சிப்புமானவர் (சங் 118:14)
அவர் பெரியவரும் மகா பெலமுள்ளவர்
அவர் அறிவோ அளவில்லாதது (சங் 147:5)

4

கர்த்தருடைய சமுகத்தில்
பரிபூரண ஆனந்தமும்
அவர் வலது பாரிசத்திலேயோ
நித்திய பேரின்பமும் உண்டே (சங: 16:11)